செ.கு.எண்: 248

நாள்: 9/12/2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 9.12.2011

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பழவேலி கிராம எல்லைக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் 8.12.2011 அன்று மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த அரசு பேருந்து டயர் பழுதாகி நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்த போது, திருவண்ணாமலையிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த மற்றொரு அரசு பேருந்து மோதியதில், டயர் மாற்றிக் கொண்டிருந்த ஓட்டுநர் திரு. ஹென்றி மற்றும் பேருந்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நடத்துநர் திரு. திருமலை ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த ஓட்டுநர் திரு. ஹென்றி மற்றும் நடத்துநர் திரு. திருமலை ஆகியோர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் ஓட்டுநர் திரு. அமிர்தசாமி என்பவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த ஓட்டுநர் திரு. ஹென்றி மற்றும் நடத்துநர் திரு. திருமலை ஆகியோர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் ஓட்டுநர் திரு. அமிர்தசாமிக்கு 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9